ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2299 - 2022 සැප්තැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2022.09.23

*2299 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 260 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | 262 |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் 2022, செத்தெம்பர் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) டாக்டர் சமன் வீரசிங்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, செத்தெம்பர் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

259 - B 082384 - 353 (2022/09)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கிய மானியப் பத்திரத்தினை இரத்து செய்தல் (104 ஆம் பிரிவு ) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்ட, யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் உடவத்த பத்திரகே இந்திக அநுருத்த பியதாச ஆகிய நான், காணி அபிவிருத்தி, கட்டளை சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு முன்னால் சனாதிபதி அவர்களால் 1993 ஆம் ஆண்டு மர்ச்சு மாதம் 02 ஆந் திகதி வழங்கியுள்ள මධ්‍යම/යනු/113 இலக்கத்தைக் கொண்ட மானியப் பத்திரத்தின் உரிமையாளரான பானபொக்க குடியிருப்பில் வசித்த இராஜபக்ஷகே சோமதாஸ எலியஸிக்கு வழங்கி கண்டி மாவட்ட பதிவகத்தின் LDO/B/01/14/93 இலக்கத்தின் கீழ் 1993.06.23 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் குறித்த அட்டவணையில் குறிக்கப்படும் காணிக்கு வாரிசாக சட்டபூர்வமான உரிமையாளர் ஒருவர் இல்லாமையால் அல்லது உரிமையுடையவர் ஒருவர் இருப்பினும் அவர் வாரிசாவதற்கு விரும்பாததன் காரணத்தால் வாரிசு நிலைக்கு நியமனம் பெற ஒருவர் இல்லையென அறிவிக்கப்பட்டிருப்பதனால் அம் மானியப் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் அதனை. 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.*

**அட்டவணை**

*மத்திய மாகாணம், கண்டி நிர்வாக மாவட்டத்தின் யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவின் கந்து பலாத்தை கோரளையின் பாணபொக்க கிராம அலுவலர் பிரிவின் கந்தன்கம எனும் கிராமத்தில் அமைந்துள்ள, கண்டி அளவையாளர் அதிகார சபையின் பொறுப்பில் உள்ள அளவையாளர் நாயகத்தால் தயாரித்த ஓ.පී.මහ 2610 எனும் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின் இல. 07 இனைக் கொண்ட கு காணித் தொகுதி என குறிக்கப்பட்டுள்ளதும், 0.1936 ஹெக்டயார் பரப்பளவினைக் கொண்ட கீழ் குறித்த வாறான எல்லைகளைக் கொண்ட அரச காணி.*

*வடக்கு : தூளிஹேன தேயிலைத் தோட்டம்;*
*கிழக்கு : துண்டு இல. 8 1/2;*
*தெற்கு : பிரவேச வழி மற்றும் துண்டு இல. 8 1/2;*
*மேற்கு : துண்டு இல.6.*

*யூ. ஜீ. இந்திக அநுருத்த பியதாச,*
*பிரதேச செயலாளர்,*
*யட்டிநுவர.*

*பிலிமத்தலாவை ,*
*2021, யூலை 07.*

*09 - 277/1*

---

*இணைப்பு - 09*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உப பிரிவின் (4) ஆவது உப பிரிவின் சீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 பிரிவு) இற்கான அறிவித்தல்

*மத்திய மாகாணத்தின் , கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய வீரகோன் முதியன்சேலாகே தக்ஷிலா தமயந்தி குமாரி வீரகோன் ஆகிய நான், பிரிவு 104 இன் கீழ் மானியத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தலை விடுக்கிறேன். அதி மேதகு சனாதிபதியினால் உப பிரிவு 19(4) நில கட்டளை சட்டத்தின் பிரகாரம் மத்திய/பாது/12 என இலக்கமிடப்பட்டு 1990. 05.31 ஆந் திகதி வூட்தோப்வத்த கொலனியில் வசிக்கும் திரு. திசாநாயக முதியன்சேலாகே தர்மரத்ன என்பவருக்கு மானியமாக E/A/54/364 இலக்கத்தில் 1990.07.16 ஆந் திகதி கண்டி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ள காணிக்கு வாரிசுடையவர் நியமிக்கப்பட முடியாது. சட்டப்படி உரித்துடையோர் அல்லது சட்டப்படி உரித்து கோருவோரோ இல்லை. இது தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் எனக்கு 2022.10.23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறிவிக்கவும்.*

**அட்டவணை**

*ஒதுக்கப்பட்ட அரசாங்க காணி, மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், வூட்தோப்வத்த காணி , பல்லேகம்பஹ பத்துவயில் அலுத்கம கிராம அலுவலர் பிரிவில், அலுத்கம மகாகும்புர கம்மெத்த சக தொரகமுவ எனும்*

கிராமத்தில் அமைந்துள்ளது. வரைவு செய்யப்பட்ட லொட் இல. 06, கல விபரகோவை இல. 54/14/1 நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் கோவை எண்ணில், தட்டு எண்ணிடப்பட்ட PP/ Mah/2528 நில அளவையாளர் நாயகத்தால் 1/20 4A இலக்கமிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரிப்படம் 0.194 ஹெக்டயார் அளவு பின்வரும் எல்லைக்கு உட்பட்டது.

வடக்கு : PP A 1530/2;
கிழக்கு : லொட் இல. 08;
தெற்கு : மாலிகாதென்ன வத்த;
மேற்கு : PP A 1742/186.

டபிள்யூ. எம். ரி. டி.கே. வீரகோன்,
பிரதேச செயலாளர்/பிரதி காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கிடையில்).

பிரதேச செயலகம்,
பாத்ததும்பர.
2022, பெப்புருவரி 01.

09 - 277/2

---

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில் உட பலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர் ஆர். ஏ. டீ. ரீ.என். தென்னகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் 1983.12. 08 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/பிர/3543 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய எஸ்கொட் குடியிருப்பில் வசிக்கும் துனுசிங்ஹலே கெதர சுகதபால அவர்களுக்கு வழங்கிய கம்பளை மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் எல்.டீ.ஓ. சீ. 6/103 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.06.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.10.23 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கண்டி நிருவாக மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர இஹல கோரளேயில் தெல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் அட்டபாகே பல்லேகம என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட .............. ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் மு.பி.மஹ 417 ஆம் நிரல் இலக்க மற்றும் 16 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 01றூட், 06பேர்ச் அளவான விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்ட அரச காணி: எஸ்கொட் குடியிருப்பு.

வடக்கு : குடியிருப்பு வீதி;
கிழக்கு : குடியிருப்பு வீதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 17;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 17 மற்றும் காணித்துண்டு இலக்கம் 15;
மேற்கு :காணித்துண்டு இலக்கம் 15 மற்றும் காணித்துண்டு இலக்கம் 14.

ஆர்.ஏ.டீ.ரி.என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த, கம்பஹா.

2022, யூன் 08.

09 - 277/3

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/64039.
மாகாணக் காணி ஆணையாளரின் இல : NWP/ PLC/ L9/NK/ LTL/ 23

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், நிகவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, இல. 318, கும்புக்வெவ கிராம அலுவலர் பிரிவில், கும்புக்வெவ எனும் கிராமத்தில் எப்.வி.பி. 2967 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 474 எனக் காட்டப்பட்டுள்ளதும் 2.284 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை மதவழிபாடு நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஸ்ரீ ஷைலதலாராம ஆரண்ய சேனாசன நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 87 மற்றும் 473;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 17 மற்றும் 473;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 37 மற்றும் எப்.வி.பி. 2966 ஹல்மில்லாவ;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 37 மற்றும் 87.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்னைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது வருடங்கள் (30) (2021.08.10 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சர் குத்தகையை அனுமதித்த வருடத்தின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/2 % வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

**தவணைப்பணம்**: இல்லை.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி ஆரண்ய சேனாசனய நடத்தும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2021.08.10 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்ளாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் மட்டும் அனுமதிக்கப்படும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கந்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. ஆர்.ஏ.ரி. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.09.05.

09 - 278

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/64052.
மாகாணக் காணி ஆணையாளரின் இல : NWP/ PLC/ L9/PN/ LTL/ 11.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், பன்னல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, இல.1558, மாஹிங்கமுவ கிராம அலுவலர் பிரிவில், அகார எனும் கிராமத்தில் அமைந்துள்ள எப். வி.பி.366 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித் துண்டு இலக்கம் 06 எனக் காட்டப்பட்டுள்ளதும் 03 றூட் 37 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. திவெல்வத்த கமகே சுமித் வஜிர பெரேரா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 33;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 05;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 33;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 33.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்னைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்**.-முப்பது வருடங்கள் (30) (2022.03.24ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் ஆண்டுக்கான காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது 5 மில்லியன் ரூபாவுக்கு (ரூ.5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் பிரதான விலை மதிப்பீடாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி 5 மில்லியன் ரூபாவுக்கு (ரூ.5,000,000) அதிகமாக உள்ள சந்தர்ப்பத்தில் விலை மதிப்பீடாளரின் விலை மதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன், அதன் நேர் முன்னைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்தின் 20% கூட்டப்பட்டு குத்தகைப் பணம் அறவிடப்பட வேண்டும்.

**தவணைப்பணம்**: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டு சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.03.24 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் மட்டும் அனுமதிக்கப்படும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள /கட்டப்படவிருக்கும் கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற் குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. ஆர்.ஏ.ரி. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022., செத்தெம்பர் 12.

09 - 333

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/16699(1).
மாகாணக் காணிஆணையாளரின் இல : EP/ 28/ LB/ LS/ BAT/ (COM) /2.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 202 ஏ கறுவன்கேனி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கறுவன்கேனி எனும் கிராமத்தில் உள்ளதும் பிபி மட 1430 பூர்வாங்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.1400 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. மொஹமட் லெப்பை நளீன் என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : வீதி மற்றும் கறுவன்கேனி காணி;
கிழக்கு : கறுவன்கேனி காணி;
தெற்கு : வீதி;
மேற்கு : வீதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2022.08.25 தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2022 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்து ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்தக் குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

*தவணைப்பணம்:* அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.08.25 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ். ஜீ. தினாலி சதுரங்கா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, செத்தெம்பர் 05.

09 - 290

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/63573.
மாகாணக் காணிஆணையாளரின் இல : EP/ 28/ LB/ LS/ Tri/ KUC /98.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கும்பரப்பிடிய கிராம அலுவலர் பிரிவில் கும்பரப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும் ..... ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் PLC/ EP/ 28/ Sur/ 2018/ 002 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 03 றூட் 35. 98 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு வல்ஹனங்கெ ரம்யா பிரியதர்சினி டா சில்வா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : PLC/ EP/ 28/ Sur/ 2018/ 002 lot 8 மற்றும் PLC / EP/ 28/ Sur/ 2018/ 002 கடல்;
கிழக்கு : PLC/ EP/ 28/ Sur/ 2018/ 002 கடல் PLC / EP/ 28/ Sur/ 2018/ 002 lot 06;
தெற்கு : PLC/ EP/ 28/ Sur/ 2018/ 002 lot 6 மற்றும் PLC / EP/ 28/ Sur/ 2018/ 002 lot 13 ;
மேற்கு : PLC/ EP/ 28/ Sur/ 2018/ 002 lot 13 மற்றும் PLC / EP/ 28/ Sur/ 2018/ 002 lot 8.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2021.03.02 தொடக்கம் );

**வருடாந்தக் குத்தகை**.- குறித்த வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட அபிவிருத்தியடையாத பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம். ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்து ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்தக் குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

*தவணைப்பணம்: அறவிடப்படமாட்டாது.*

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

கே.எல்.பி.சுபாஷினி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, ஓகத்து 12.

09 - 265